# தூத்துக்குடி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், தூத்துக்குடி.

*****

## அறிவிப்பு

தேதி: 14.10.2025

**<u>சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாகப் பணியாற்ற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.</u>**

தூத்துக்குடி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும், கோவில்பட்டி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், சாத்தான்குளம், விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம் ஆகிய ஊர்களில் இயங்கும் வட்ட சட்டப் பணிகள் குழுவிற்கு சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக சேவை புரிய கீழே குறிப்பிட்டுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது:

- ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
- ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்தகுடிமக்கள்
- சமூகப் பணியில் முதுநிலைக் கல்விபயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
- அங்கன்வாடிப் பணியாளர்கள்
- மருத்துவர்கள் / உடல் நல நிபுணர்கள்
- மாணவர்கள் மற்றும் சட்டக்கல்லூரி மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞராக பதிவு செய்யும் வரை)
- அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப்பிரமுகர்கள்
- மகளிர் குழுக்கள், மைத்ரி சங்கங்கள் மற்றும் வறியோரை உள்ளடங்கிய சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள்
- மாவட்ட / வட்ட சட்டப் பணிகள் தன்னார்வ சட்டப்பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்.

| | | |
|---|---|---|
| 1. | கல்வித்தகுதி | குறைந்தபட்ச கல்வித்தகுதி – 10ம் வகுப்பு தேர்ச்சி அடிப்படை கணிணி அறிவு விரும்பத்தக்கது. |
| 2. | இதர தகுதிகள் | சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் இரக்கம், ஏனையவரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் தன்மை, கலப்படமற்ற தூய்மை ஆகிய அடிப்படை மனித குணங்களின் மீது ஒன்றி இருத்தல், எவ்வித பணப் பயனும் எதிர் பார்க்காமல் தன்னார்வ சேவைபுரிதல், தங்கள் பணிகளில் இருந்து வருமானத்தை எதிர் நோக்காதவர்களாகவும், அதே வேளையில் ஆனால் இச்சமூகத்தின் பலவீனமான பிரிவினர், வறியவர்கள் ஆகியோரை மேலுயர்த்துவதற்கான உறுதியும், உணரும் திறனும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். |
| 3. | வயது | 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். |
| 4. | மதிப்பூதியம் | வேலை பணிபுரியும் முழு நாள் ஒன்றுக்கு ரூபாய் 750/- மதிப்பூதியமாக வழங்கப்படும். |
| 5. | விண்ணப்பிக்க கடைசி நாள் | **30/10/2025; மாலை 5 மணி** |

தூத்துக்குடி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் 13 நபர்களும், கோவில்பட்டி வட்ட சட்டப்பணிகள் குழுவில் 5 நபர்களும், திருச்செந்தூர் வட்ட சட்டப்பணிகள் குழுவில் 3 நபர்களும், ஸ்ரீவைகுண்டம் வட்ட சட்டப்பணிகள் குழுவில் 5 நபர்களும், சாத்தான்குளம் வட்ட சட்டப்பணிகள் குழுவில் 3 நபர்களும், விளாத்திகுளம் வட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் 3 நபர்களும் மற்றும் ஓட்டப்பிடாரம் வட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் 5 நபர்களும் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். விருப்பமுள்ளவர்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை நிரப்பி பதிவு தபாலில் கீழே கண்ட முகவரிக்கு **30**/10/25 அன்று மாலை 5 மணிக்கு முன்பாக கிடைக்கப் பெறுமாறு அனுப்பக்கோரப்படுகிறது:-

**உயர்திரு.தலைவர் அவர்கள்**
**தூத்துக்குடி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு**
**ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்**
**தூத்துக்குடி – 628 003.**

மேற்படி சட்டம் சார்ந்த தன்னார்வத் தொண்டர்களுக்கான கடமை சேவை மட்டுமே ஆகும். இது உத்தியோகம் இல்லை, தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை என்பதையும் சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நேர்காணல் தேதி மற்றும் இடம் பின்னர் விண்ணப்பதாரருக்கு இணையதள அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படும். மற்ற விவரங்களுக்கு தூத்துக்குடி மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு அலுவலகத்தையோ அல்லது அருகில் உள்ள வட்ட சட்டப் பணிகள் குழுவையோ அணுகவும்.

விண்ணப்பத்தினை தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

https://thoothukudi.dcourts.gov.in/

**(ஓ/ம்.R.வசந்தி)**
**தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு**
**தூத்துக்குடி**

# தூத்துக்குடி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

**சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை – 2025**

**பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஒட்ட வேண்டும்**
**Pass Port Size Photo to be affixed**

| | | |
|---|---|---|
| **1.** | பெயர் (பெரிய எழுத்துக்களில்)<br>Name (In Capitals Letters) | |
| **2.** | பாலினம் / Sex | ஆண் / பெண் / திருநங்கை<br>(Male / Female / Transgender) |
| **3.** | வயது / Age | |
| **4.** | தகப்பனார் / கணவர் பெயர்<br>Father's / Husband's Name | |
| **5.** | கல்வித் தகுதிகள்<br>Educational Qualifications | |
| **6.** | தொழில் சார்ந்த கல்வித் தகுதிகள்<br>Technical Qualifications | |
| **7.** | ஜாதி மற்றும் பிரிவு<br>Community / Caste | |
| **8.** | மதம் / Religion | |
| **9.** | அலுவலக விலாசம் /Office Address | |
| **10.** | வசிப்பிட விலாசம் / Residential Address | |
| **11.** | தொழில் / Occupation | |
| **12.** | தொலைபேசி எண் / Telephone Number | |
| **13.** | கைபேசி எண் / Mobile Number | |

| | | | |
|---|---|---|---|
| **14.** | மின்னஞ்சல் முகவரி / E-Mail Address | | |
| **15.** | எப்பகுதியில் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணி செய்யவிரும்புகிறீர்கள்:<br>Place in which willing to work as Para Legal Volunteers<br>☐<br>மார்க் செய்யவும் / Tick in the Appropriate Column | தூத்துக்குடி / Thoothukudi | |
| | | கோவில்பட்டி / Kovilpatti | |
| | | திருச்செந்தூர் / Tiruchendur | |
| | | ஸ்ரீவைகுண்டம் / Srivaikundam | |
| | | சாத்தான்குளம் / Sathankulam | |
| | | விளாத்திகுளம் / Vilathikulam | |
| | | ஓட்டப்பிடாரம் / Ottappidaram | |
| **16.** | தாங்கள் ஏற்கனவே சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணிபுரிந்திருந்தால் விவரம் மற்றும் செய்த பணிகள் குறித்து தெரிவிக்கவும்.<br>Whether you have already worked as P.L.V.? If So, details or Service rendered to be stated. | | |
| **17.** | குற்ற வழக்குகளில் ஏதேனும் நீவிர் சம்பந்தப்பட்டவராக இருந்தால், அதன் பற்றிய விவரம் | | |
| **18.** | மேலும் தாங்கள் தெரிவிக்கும் தகவல்கள் / Other Informations, if any. | | |

நாள் / Date :

இடம் / Place:

விண்ணப்பதாரரின் கையெழுத்து /
Signature of the Applicant

**குறிப்பு:** சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் பணி நிரந்தரபணி அல்ல. மேலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் கிடையாது, சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும். பணி நிரந்தரம் செய்ய உரிமை எதுவும் நான் கோரமுடியாது என்பதை நான் அறிந்துகொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையெழுத்து /
Signature of the Applicant